## 2.55 விரிவாக்க அலுவலர்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாறுதல் செய்வது – முன் அனுபவ விதிகள் செயல்படுத்துவதற்கு – விலக்கு அளித்தல்

ஊரக வளர்ச்சி (இ7) துறை

அரசாணை (நிலை) எண். 865 நாள் : 22.10.1990

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 288, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 15.6.1990
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் நேர்முக கடித எண்.84953/90–4/(ஆ), நாள் 22.7.90.

**ஆணை**

பார்வை ஒன்றில் கண்டுள்ள ஆணையின்படி அரசு பணியாளர்கள் (ஏ,பி மற்றும் சி தொகுதிகள்) ஓரிடத்தில் அல்லது ஓர் பதவியில் மூன்றாண்டுக் காலம் நிறைவு செய்யாதவர்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கோ அல்லது ஒரு பணியிடத்திலிருந்து மற்றொரு பணியிடத்திற்கோ மாற்றம் செய்யக் கூடாது. அவ்வாறின்றி, மூன்றாண்டுக் காலம் முடிவதற்குள் ஓரிடத்திலிருந்தோ அல்லது ஓர் பதவிலிருந்தோ மாற்றம் வேண்டுமானால் அரசின் முன்அனுமதியுடன் தான் செய்யப்படவேண்டும்.

2. ஊரக வளர்ச்சித் துறையிலுள்ள சில பணியாளர்களைப் பொறுத்தமட்டில், அவர்களுக்குரிய ஒரு பணி விதிகளில் (Single Service Rules) ஒவ்வொரு நிலையிலிருந்து அடுத்த நிலை பதவி உயர்வு பெறுவதற்கு குறிப்பிட்ட பணியிடங்களில் கீழ்க் கண்டவாறு ஓராண்டுக்குக் குறையாமல் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. இதன்படி, விரிவாக்க அலுவலர்கள் (Extension Officers) துணை வட்டார வளாச்சி அலுவலர்களாக (Deputy Block Development Officers) பதவி உயர்வு பெற கீழ்க்கண்ட பணியிடங்கள் ஒவ்வொன்றிலும் ஓராண்டுக்குக் குறையாமல் பணியாற்ற வேண்டும்.

(அ) விரிவாக்க அலுவலர் (நிர்வாகம்), (சத்துணவு), (கணக்கு), அல்லது (ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்)

விரிவாக்க அலுவலர் (ஊராட்சி)

விரிவாக்க அலுவலர் (சமூக கல்வி மற்றும் மக்கள் தொடர்பு ), (ஆதி திராவிடர் நலம்) அல்லது (சமூக காடுகள்)

(ஆ) உதவியாளர்கள் (Assistants) விரிவாக்க அலுவலர்களாக பதவி உயர்வு பெற குறைந்தது ஓராண்டுக் காலம் ஊர்நல அலுவலர் நிலை–I (Rural Welfare Officer Grade-I) ஆகவும், ஊர்நல அலுவலர் நிலை–I குறைந்தது ஓராண்டுக் காலம் உதவியாளராகவும் பணியாற்ற வேண்டும்

(இ) இளநிலை உதவியாளர் / காசாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகியோர் உதவியாளராக பதவி உயர்வு பெற குறைந்தது ஓராண்டுக் காலம் ஊர்நல அலுவலர் நிலை-II (Rural Welfare Officer Grade-II) ஆகவும், ஊர்நல அலுவலர் நிலை–II ஆக பணிபுரிபவர்கள் குறைந்தது ஓராண்டுக் காலம் இளநிலை உதவியாளார் / காசாளர் ஆகியவற்றில் ஏதேனும் ஓர் பணியிடத்தில் பணியாற்ற வேண்டும்.

3. மேலே குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளில், பத்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணை நடைமுறைபடுத்தப்படுமேயானால், ஊரக வளர்ச்சி துறையில் பணிபுரியும் பல பணியாளர்கள் பணித்தகுதி பெற வாய்ப்பின்றி பதவி உயர்வு பெற முடியாமல் போகும் நிலை ஏற்படும் என்றும், அவர்களுக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மேற்கண்ட சுழற்சி முறையினை அமுல்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன என்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே, ஒரு பணி விதிகளை முறைப்படுத்துவதில் இடையூறு ஏற்படாதிருக்கும் வகையில், ஊரக வளாச்சித் துறையில் பணிபுரியும் சில பணியாளர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான தகுதியை கருத்தில் கொண்டு பார்வை ஒன்றில் கண்டுள்ள அரசாணையை அமுல்படுத்துவதில் இவர்களுக்கு மட்டும் விலக்கு அளித்து ஆணை பிறப்பிக்குமாறு இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கோரிக்கையை கவனமாக பரிசீலனை செய்த பின்னர் அதனை ஏற்றுக் கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, ஒரு பணி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள முன் அனுபவ விதியை (Service Qualification Rule) செயல்படுத்துவதற்கு மட்டும் மாறுதல் செய்யும் பொருட்டு, அரசாணை(நிலை) எண் 288, பணியாளர்

மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 15.6.1990–ல் வெளியிட்ட மற்றும் அரசு கடித எண் 55504/பணி. எஸ்/90–1, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள் 27.6.1990–ல் கண்டுள்ள ஆணையை செயல்படுத்துவதிலிருந்து ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரியும் கீழ்க்கண்ட பணியாளர்கட்கு மட்டும் விலக்களித்து அரசு ஆணையிடுகிறது.

1. விரிவாக்க அலுவலர்கள்
2. உதவியாளர்/ ஊர்நல அலுவலர் நிலை–1
3. இளநிலை உதவியாளர் / காசாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்துத் தட்டச்சர் / ஊர்நல அலுவலர் நிலை–2

5. இவ்வாணை பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.கு.எண் 69847/பணி–எப்/90–1, நாள் 31.8.90 மூலம் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். நாராயண்**
அரசு செயலாளர்